பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

10 12 2025 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலகின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், இந்தியாவில் பெருமளவில் முதலீடு செய்ய முன்வந்திருப்பது, இளையோருக்கு அதிக வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தமிழகத்தில் திருச்சி, சேலம் உள்ளிட்ட 4 மாவட்டங்களில் பருத்தி உற்பத்தி திறன் இயக்கம் செயல்படுத்தப்பட இருப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

3. 2026ஆம் ஆண்டுக்கான சென்னை பன்னாட்டு புத்தக கண்காட்சியில் 100 நாடுகள் பங்கேற்க இருப்பதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

5. தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 101 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மைக்ரோஃசாப்ட் உள்ளிட்ட உலகின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், இந்தியாவில் பெருமளவில் முதலீடு செய்ய முன்வந்திருப்பது, இளையோருக்கு அதிக வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மைக்ரோஃசாப்ட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி திரு. சத்யா நாதெள்ளா, புதுதில்லியில் நேற்று பிரதமரை சந்தித்து, பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து திரு.சத்யா நாதெள்ளா வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், இந்தியாவில், 17 பில்லியன் டாலர் அளவிற்கு முதலீடு செய்ய மைக்ரோஃசாப்ட் உறுதி அளித்திருப்பதாக கூறியுள்ளார்.

இதேபோன்று, இன்டெல் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி, திரு. Lip Bu Tan மற்றும் Cognizant நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி திரு. ரவிகுமார், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் திரு.ராஜேஷ் வாரியர் ஆகியோரும் பிரதமரை சந்தித்து, இந்தியாவில் தங்களது நிறுவனத்தின் முதலீடுகளை அதிகரிக்க இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இந்த நிறுவனங்களின் முதலீட்டு அறிவிப்புகளை வரவேற்றுள்ள பிரதமர் திரு. நரேந்திரமோடி, மைக்ரோஃசாப்ட் நிறுவனம், ஆசியாவில் இதுவரை இல்லாத அளவிற்கு இந்தியாவில் பெருமளவு முதலீடு செய்ய இருப்பது, மினகவும் மகிழ்ச்சியளிப்பதாக கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவுகளில், இந்த முதலீடு, செயற்கை நுண்ணறிவு சார்ந்த தொழில் துறையில், இந்தியாவை உலகின் முன்னணி நாடாக திகழச் செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தொழில்நுட்பத் துறையில், புதுமைசார்ந்த எதிர்காலத்தை உருவாக்க இன்டெல் நிறுவனம், இந்திய இளையோருடன் இணைந்து பணியாற்றுவது, சிறந்த அனுபவத்தை ஏற்படுத்தும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதேபோன்று, Cognizant நிறுவனத்தின் ஒத்துழைப்பு, செயற்கை நுண்ணறிவு மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைகளில் இந்திய இளையோருக்கு பயனுள்ளதாக அமையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கான பருத்தி உற்பத்தி திறன் இயக்கம் தமிழகத்தில் திருச்சி, அயரிலூர், பெரம்பலூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட இருப்பதாக மத்திய ஜவுளித்துறை இணையமைச்சர் திரு. Pabitra Margarita தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதனைத் தெரிவித்த அவர், இந்த இயக்கத்தின் மூலம் பருவநிலைக்கு ஏற்ற மற்றும் பூச்சிகளை எதிர்க்கும் திறன் கொண்ட உயர் ரக பருத்தி விதைகளை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்பட இருப்பதாக கூறியுள்ளார்.

<<<<>>>>

2026ஆம் ஆண்டுக்கான சென்னை பன்னாட்டு புத்தக கண்காட்சியில் 100 நாடுகள் பங்கேற்க இருப்பதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று இந்த கண்காட்சிக்கான இலட்சினையை வெளியிட்டுப் பேசிய அவர், இந்த மாநாட்டில் ஆயிரத்து 354 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக இருப்பதாக கூறினார்.

(Voice Byte - Anbil Mahesh - 35 Sec)

<<<<>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகள் தமிழகத்தில் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டப்பேரவைத் தொகுதிகளில் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களைப் பெற்று அதனை இணையதளத்தில் பதிவேற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திருப்பத்தூர் சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர் தெரிவித்துள்ளார்.

(Voice Byte - Vimala - 23 Sec)

<<<<>>>>

சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் குறித்த சர்வதே பிரகடனம் ஐ.நா.சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டதை நினைவுகூறும் விதமாக, இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

அன்றாட வாழ்வில், உணவு, கண்ணியம், பாதுகாப்பு சார்ந்த உரிமைகள் மற்றும் கருத்துரிமையின் அவசியத்தை வலியுறுத்தும் விதமாக, “மனித உரிமைகள் - நமது அன்றாட அத்தியாவசியங்கள்” என்பதே, இந்த ஆண்டின் மையக் கருத்தாகும்.

இந்நாளையொட்டி, தேசிய மனித உரிமைகள் ஆணையம் சார்பில், புது தில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி.திரௌபதி முர்மு, சிறப்பு விருந்தினராக பங்கேற்று உரையாற்றுகிறார்.

இந்நாளையொட்டி தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில், அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை நிலைநாட்ட இந்நாளில் உறுதியேற்போம் என்று தெரிவித்துள்ளார்.

தமிழக மனித உரிமைகள் ஆணையம் கடந்த 1997ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதில் இருந்து இதுவரை 2 லட்சத்து 84 ஆயிரத்துக்கும் அதிகமான புகார்கள் பெறப்பட்டு அதில் 2 லட்சத்து 52 ஆயிரத்து 573 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

உலக சுகாதார அமைப்பின் பாரம்பரிய மருத்துவத்திற்கான இரண்டாவது உலகளாவிய உச்சிமாநாடு இம்மாதம் 17ஆம் தேதி முதல் 19ஆம் தேதி வரை புதுதில்லியில் நடைபெற உள்ளது.

சென்னையில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த மாற்றுத்திறனாளிகளுக்கான ஹோமியோபதி ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசகர் டாக்டர் கொல்லிராஜு, இந்த மாநாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் பாரம்பரிய மருத்துவப் பொருட்களுக்கு உலக சந்தையில் சிறந்த வாய்ப்பை ஏற்படுத்துவதாக அமையும் என்று கூறியுள்ளார்.

(Voice Byte – Dr. Kolliraju – 48 Sec)

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பங்களாதேஷுக்கு கூடுதலாக மின்சாரம் வழங்க இந்தியாவின் மின் கட்டமைப்புகளை பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்குமாறு நேபாள எரிசக்தி துறை அமைச்சர் திரு. Kul Man Ghising கேட்டுக்கொண்டுள்ளார்.

--------------

அமெரிக்காவின் Kentucky பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

--------------

மும்பை காவல்துறையினர் மேற்கொண்ட சோதனையில் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

--------------

யுனானி மருத்துவ சிகிச்சைக்காக சென்னைக்கு வரும் மருத்துவ சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வரும் காலங்களில் மேலும் அதிகரிக்கும் என்று சென்னை ராயபுரத்தில் செயல்பட்டு வரும் யுனானி மருத்துவ ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

--------------

தூத்துக்குடியில் வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் பயன்படுத்தப்பட உள்ள மின்னணு வாக்குப்பதி இயந்திரங்கள் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் நாளை முதல் சரிபார்க்கப்படும் என்று ஆட்சியர் திரு. இளம் பகவத் கூறியுள்ளார்.

---------------

மயிலாடுதுறை மாவட்ட கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் இம்மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் மறு அறிவிப்பு வரும் வரை கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று மீன்வளத்துறை அறிவுறுத்தியுள்ளது.

--------------

தருமபுரி மாவட்டத்தில் நலன் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின்கீழ் இதுவரை 21 ஆயிரத்து 615 பயனாளிகள் பயனடைந்துள்ளதாக ஆட்சியர் திரு. சதீஷ் கூறியுள்ளார்.

--------------

நாமக்கல் அருள்மிகு ஆஞ்சநேர் சுவாமிக்கு வெண்ணெய் காப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றது.

--------------

திருவள்ளூர் மாவட்டத்தில் வருவாய் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 12ஆம் தேதி நடைபெறும் என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

--------------

***விளையாட்டுச் செய்திகள்***

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 101 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கட்டாக்கில் நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியில் இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 175 ரன் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய தென்னாப்பிரிக்க அணி 12 புள்ளி 3 ஓவரிலேயே 74 ரன் மட்டும் எடுத்து ஆட்டமிழந்தது.

5 போட்டிகள் கொண்ட இந்த தொடரின் இரண்டாவது போட்டி சண்டிகரில் நாளை நடைபெறுகிறது.

<<<<The End>>>>